ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2269 - 2022 පෙබරවාරි මස 25 වැනි සිකුරාදා - 2022.02.25

*2269 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 328 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 334 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, மாச்சு மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, மாச்சு மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

325-B 82319-5,413 (2022/ 02)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கைப் பாராளுமன்றம்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியிலுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-

இதன் கீழ் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் கல்வித் தகைமை/ தொழில்சார் தகைமை மற்றும் அனுபவம் ஆகியன தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2022, மாச்சு மாதம் 11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் "பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் தாம் விண்ணப்பிக்கும் பதவியை உரிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். (மேலும் இந்த அறிவித்தல் தொடர்பான விபரங்களை www.parliament.lk எனும் இணையத் தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்).

**க. வே.** : தான் விண்ணப்பிக்கும் பதவியை விண்ணப்பப் படிவத்தின் மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

1. பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்/சிங்களம்)
2. பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்/சிங்களம்)
3. பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (ஆங்கிலம்/தமிழ்/ஆங்கிலம்)

1.1 **சம்பள அளவுத்திட்டம்.**- 2016.11.07 ஆந் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,340.00 - 3×755- 13 × 1,030 - ரூபா 62,995.00 ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகள் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த மாதாந்த சம்பளம் ரூ. 95,000.00 ஆகும்.)

1.2 **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 22 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருக்கின்ற விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடைத்தாகாது.)

1.3 **கல்வித் தகைமைகளும் அனுபவமும்.**- கீழ்க்காணும் (அ) மற்றும் (ஆ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளையும் அனுபவத்தையும் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து ஒரு பட்டத்தைப் பெற்றிருத்தல்.

(பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்/சிங்களம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், சிங்கள அல்லது ஆங்கில மொழியையும், பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்/ சிங்களம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், சிங்களம் அல்லது தமிழ் மொழியையும், பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (ஆங்கிலம்/தமிழ்/ஆங்கிலம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியையும் தமது பட்டங்களில் பின்பற்றி சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

மற்றும்

க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில், இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில், கணிதப் பாடத்தில் திறமைச் சித்தியும் மற்றும் பட்டத்தில் பின்பற்றாத மொழியில் திறமைச் சித்தியும் அடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

மேற்குறித்த தகைமைகளை பெற்றதன் பின்னர் ஒரு அரசாங்க நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் கற்பித்தல், உரைபெயர்ப்பு, மொழிபெயர்ப்பு மற்றும் வெகுசன ஊடகம் போன்ற மொழியை அடிப்படையாகக் கொண்டவொரு துறையில் இரண்டு வருடங்களுக்கு குறையாதவொரு அனுபவத்தை பெற்றிருத்தல்.

மற்றும்

மொழிகளுக்கு இடையில் தடையின்றி உரைபெயர்க்கக்கூடிய ஆற்றல் இருத்தல்.

(ஆ) க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) ஒரே அமர்வில் 04 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அல்லது புதிய பாடத்திட்டத்தில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில், இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில், கணித பாடத்தில் திறமைச் சித்தியும் மற்றும் உரிய மொழியில் திறமைச் சித்தியும் அடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்/சிங்களம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், சிங்கள மொழியிலும் மற்றும் ஆங்கில மொழியிலும், பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்/சிங்களம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், சிங்கள மொழியிலும் மற்றும் தமிழ் மொழியிலும், பராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (ஆங்கிலம்/ தமிழ்/ ஆங்கிலம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், ஆங்கில மொழியிலும் மற்றும் தமிழ் மொழியிலும் திறமைச் சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

மேற்குறித்த தகைமைகளை பெற்றதன் பின்னர் ஒரு அரசாங்க நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் கற்பித்தல், உரைபெயர்ப்பு, மொழிபெயர்ப்பு மற்றும் வெகுசன ஊடகம் போன்ற மொழியை அடிப்படையாகக் கொண்டவொரு துறையில் ஐந்து வருடங்களுக்கு குறையாதவொரு அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

மற்றும்

மொழிகளுக்கு இடையில் தடையின்றி உரைபெயர்க்கக்கூடிய ஆற்றல் இருத்தல்.

1.4 **ஆட்சேர்ப்புத்திட்டம்**.- சமகால உரைபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்ப்பு தொடர்பான பரீட்சைகள் மற்றும் ஒரு நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**குறிப்பு**: மேற்குறித்த 1.3 (அ) அல்லது (ஆ) இன் கீழ் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் தாம் விண்ணப்பிக்கும் உரிய பிரிவுக்குரிய ஊடக மொழிகளுக்கு இடையில் சமகாலத்தில் உரைபெயர்க்கக் கூடிய ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆயினும், சமகால உரைபெயர்ப்பு அனுபவத்தை பெற்றிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

02. **கணினி செயற்றிட்ட வரைவாளர் பதவி**.-

2.1 **சம்பள அளவுத்திட்டம்**.- 2016.11.07 ஆந் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 43,565 - 9×755- 6 × 930 - ரூபா 55,940.00 ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 89,000.00.)

2.2 **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 22 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையது ஆகாது.)

2.3 **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து கணினி/தகவல் தொழில்நுட்பம்/தகவல் முறைமை ஆகிய ஒரு பாடத்தில் பட்டம் பெற்றிருத்தல்.

மற்றும்

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில், இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கில மொழி ஆகிய பாடங்களில் திறமை சித்திகள் அடங்கலாக ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

2.4 **அனுபவம்**.- மேற்குறித்த தகைமைகளைப் பெற்றதன் பின்னர், அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் ஒரு கணினி செயற்றிட்ட வரைவாளர் பதவியில் “PHP, Java, Java script" மற்றும் "MS SQL இல் RDBMS, MySQL" முதலிய இணைய தளங்களை அடிப்படையாகக் கொண்டமைந்த உள்ளீட்டு அபிவிருத்தி விடயத்தில் ஆகக் குறைந்த 3 வருட கால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2.5 **ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்துமூலப் பரீட்சை/தொழில் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

03. **தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்சாரம்) பதவி**.-

3.1 **சம்பள அளவுத்திட்டம்**.- 2016.11.07 ஆந் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம் இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 34,605 - 9×660 - 3 × 755 - ரூபா 42,810.00 ஆகும். (சகல மேலதிகக் கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 63,000.00 ஆகும்.)

3.2 **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 25 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்பொழுது அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருக்கின்ற விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

3.3 **கல்வித் தகைமைகள்**.- க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் கணிதப் பிரிவில் நான்கு பாடங்களில் (பழைய பாடத்திட்டம்) அல்லது புதிய பாடத்திட்டத்தில் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில், இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் அல்லது தமிழ் மொழியில், ஆங்கில மொழியில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் மற்றும் கணித பாடத்தில் திறமை சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

3.4 **தொழிற்றகைமைகள்**.-

(i) தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT)
(மின்னியல்/இலத்திரனியல்/தொலைத்தொடர்பு) அல்லது

(ii) உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (HNDE)
(மின்னியல்/இலத்திரனியல்/தொலைத்தொடர்பு) அல்லது

(iii) தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா (NDES)
(மின்னியல்/இலத்திரனியல்/தொலைத்தொடர்பு) அல்லது

(iv) திறந்த பல்கலைக்கழக தொழில்நுட்ப டிப்ளோமா (மின்னியல்/இலத்திரனியல்/தொலைத்தொடர்பு) அல்லது

(v) மின்னியல்/இலத்திரனியல்/தொலைத்தொடர்பு பிரிவுக்குரிய 6 ஆம் மட்ட NVQ சான்றிதழைப் பெற்றிருத்தல்.

3.5 **அனுபவம்**.- மேற்குறித்த (3.3), (3.4) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளையும் மற்றும் தொழில் தகைமைகளையும் பூர்த்தி செய்ததன் பின்னர், அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்தில் இலத்திரனியல்/ கட்புல செவிப் புல/ தொலைத் தொடர்பு/ ஒலிபரப்பு அல்லது அதற்கு இணையான ஒரு பிரிவில் குறைந்தது 3 வருட காலம் தொழில்நுட்ப உத்தியோகத்தராக பணிபுரிந்த அனுபவம்.

நிரல்சாரா பதிப்பு, கெமரா கட்டுப்பாடு, உருத்தோற்றக் கலப்பு, ஒலிபரப்பு முறைமைகள் நிறுவுகைகள் மற்றும் உருத்தோற்றக் கட்டமைப்பு (Configuration) ஆகியவற்றில் சிறந்த அனுபவமுடைய, கணினி மென்பாக மற்றும் கணினி வன்பாகம் ஆகியவற்றில் பொதுவாக கிடைக்கக்கூடிய வீடியோ மாதிரிகளில் சிறந்த அறிவு மற்றும் கணினி மென்பாகம் மற்றும் கணினி வன்பாகம் ஆகியவற்றில் திறமையும் உடைய, கட்புல செவிப் புல ஒலிபரப்பு தொழில் துறையில் பணிபுரிகின்ற நபர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

3.6 **ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

04. **சேவையில் அமர்த்தும் நியதிகளும் நிபந்தனைகளும்:-**

(i) இந்தப்பதவிகள் நிரந்தரமானவை. இந்தப் பதவிகளுக்குரிய ஓய்வூதிய சம்பள அளவுத்திட்டம் பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர்கள் இயைந்தொழுக வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (03) வருட தகுதிகாண் கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள எவரேனும் நபர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அத்தகைய நபர் ஒரு வருட பதில் கடமை கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்குரிய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அநாதைகள், விதவைகள் / தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு அவரது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் விகிதாசாரத்தில் ஒரு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

(iv) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு பற்றிய சான்றறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்படும்.

05. விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றிதழ்களின் (மூலப் பிரதிகளல்ல) பிரதிகளை தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் அத்தகைய சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிக்க வேண்டும்:-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்;
(இ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்;
(ஈ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

06. அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில்/ அரச கூட்டுத்தாபனங்களில்/ நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள / நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

07. பதவியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் ஏதேனும் வழிகளில் செல்வாக்கைப் பிரயோகிப்பது பதவிக்கான தகைமையை இழக்கச் செய்யலாம்.

08. விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள ஏதாவது ஒரு விபரம் பொய் என ஒருவர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால், அவர் தகுதியற்றவர் எனக் குறிப்பிடப்படுவதற்கும், நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால், அவர் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கும் காரணமாக அமையும்.

09. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்றதும் மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரதிகளின்றி அனுப்பப்படுகின்றதுமான விண்ணப்பங்களும் மற்றும் திணைக்கள /நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். மேலும், திணைக்கள/நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டு, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுகின்றதும் மற்றும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்படாததுமான விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

குசானி ரோஹனதீர,
பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்குப் பதிலாக.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2022, பெப்புருவரி 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பாராளுமன்றம்**

................................... **பதவிக்கான மாதிரி விண்ணப்பப் படிவம்**

01.(அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :................................................................................................
.........................................................................................................................................................
.........................................................................................................................................................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்) :...........................................................................
.........................................................................................................................................................
.........................................................................................................................................................

(இ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) (Mr./Mrs./Miss) :.....................................................
.........................................................................................................................................................
.........................................................................................................................................................

02. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

03.(அ) தனிப்பட்ட முகவரி :..................................................................................................................
.........................................................................................................................................................
.........................................................................................................................................................

தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ஆ) அலுவலக முகவரி :..................................................................................................................
.........................................................................................................................................................
.........................................................................................................................................................

தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(இ) (அனுமதி அட்டையை தபாலில் அனுப்ப வேண்டிய முகவரி) :

தனிப்பட்ட : ☐ அலுவலக : ☐

04.(அ) பிறந்த திகதி :-------------
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது:
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

05. விவாகமானவரா /விவாகமாகாதவரா : (விவாகமானவர் /விவாகமாகாதவர்)

06. பால் நிலை : (ஆண் /பெண்)

07. இலங்கைப் பிரசையா எனும் விபரம் : (ஆம்/இல்லை)

08. கல்வி/உயர் கல்வித் தகைமைகள் : (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) :-

.........................................................................................................................................................
.........................................................................................................................................................
.........................................................................................................................................................
.........................................................................................................................................................

09. தொழில் தகைமை (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) :

.........................................................................................................................................................
.........................................................................................................................................................

10. வேறு தகைமைகள் :

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

11. அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) :

| நிறுவனம் | பதவி | சேவைக் காலம் |
|---|---|---|
| | | |
| | | |

12. தற்போதைய தொழில் பற்றிய விபரம் :-

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : ..........................................................................................

(ஆ) முதல் நியமனத் திகதி : ..........................................................................................

(இ) தற்போது வகிக்கும் பதவி :..........................................................................................

(ஈ) மாதாந்த அடிப்படைச் சம்பளம் :..........................................................................................

(உ) கொடுப்பனவுகள் :..........................................................................................

(ஊ) மொத்த சம்பளம் :..........................................................................................

13. நீங்கள் ஏதாவது ஒரு குற்றத்திற்காக குற்றவாளியாகக் கணிக்கப்பட்டுள்ளீர்களா? (ஆம்/இல்லை) ஆம் எனில், அது பற்றிய விபரங்களைத் தருக:

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

14. நீங்கள் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியுள்ளீர்களா? (ஆம்/இல்லை) ஆம் எனில், அது பற்றிய விபரங்களை தருக.

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

என்னால் இந்த விண்ணபப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதியளிக்கின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் இப்பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்பதையும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

-----------------------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

**திணைக்கள /நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

(அரசாங்க சேவையில் /மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்கட்கு,

இந்நிறுவனத்தில்.......................................................................................................... பதவியை வகிக்கும் திரு./திருமதி/செல்வி .......................................................................... அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் இப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்/ நிரந்தரமாக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றேன். இவரது வேலையும் மற்றும் நடத்தையும் திருப்திகரமானது எனவும் இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை எனவும், மேலும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை எனவும் சான்றுப்படுத்துகின்றேன். அவர், இந்தப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால், சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார்/ விடுவிக்கப்படமாட்டார்.

-----------------------,
திணைக்கள /நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை).

திகதி :-----.

02-293

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## முகாமைத்துவ சேவை அலுவலர் சேவையில் உள்ள தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2014 (I) (2022)

1.0 2013.12.11 ஆந் திகதிய 1840/ 34 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை பிரமாணக் குறிப்பின் பந்தி 8, பந்தி 15 இனது இடைக்கால ஏற்பாடுகள் மற்றும் இணைப்பு 05 இலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2022, யூன் மாதம் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது. இதற்கான விண்ணப்பம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், இணைய வழி (online) முறைமையில் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பங்களை இணைய வழி ஊடாக அனுப்பியதன் பின்னர் அதனை பதிவிறக்கம் செய்து அச்சுப் பிரதியை விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தலுடன், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தாபன பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் முகாமைத்துவ சேவை அலுவலர் சேவையில் உள்ள தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2014 (I) (2022) என தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2022, மாச்சு மாதம் 28 ஆந் திகதியாகும்.

**குறிப்பு**.- விண்ணப்பத்தின் அச்சுப் பிரதி தபால் மூலம் அனுப்பப்படுவது கட்டாயமானது என்பதுடன், அது தபாலில் தொலைந்து போனது என்றோ அல்லது தாமதமானது என்றோ செய்யப்படும் முறைப்பாடுகள் பற்றி கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பத்தை தாமதப்படுத்துவதால் ஏற்படக்கூடிய நட்டத்தினை விண்ணப்பதாரிகளே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2.0 (i) இச் சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் II இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையினைப் பூர்த்தி செய்திராத ஆனால் (1) அலுவலக முறைமையும் நடைமுறைகளும் (2) அரசாங்க அலுவலகங்களில் பாவிக்கப்படும் கணக்கீட்டு முறைமைகள் எனப் பெயர் குறிப்பிடப்படும் இப் பரீட்சையின் இரண்டு பாடங்களையுமோ அல்லது அவற்றில் ஒன்றையோ சித்தியெய்தி அல்லது விலக்களிப்புப் பெற்றுள்ள அலுவலர்கள் இச் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் II இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் உரிய பாடங்களிலிருந்து பாடத்துக்குப் பாட அடிப்படையில் விலக்களிக்கப்படுவர்.

(ii) இச் சேவைப் பிரமாணக் குறிப்பின் அமுலாக்கத் திகதிக்கு முன்னர் தரம் II இற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பதவியுயர்வு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஆறு (06) வருடங்கள் கடப்பதற்கு முன்னர் தரம் II இற்கு உரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையினை சித்தியெய்துதல் வேண்டும்.

3.0 முகாமைத்துவ சேவை அலுவலர் சேவையில் உள்ள தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களின் பட்டியல் மற்றும் நகர இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகளின் பற்றாக்குறை அல்லது வேறு ஏதேனும் காரணமாக குறித்த நிலையத்தினை இரத்துச் செய்வதற்கும் மற்றும் பரீட்சார்த்தியின் இரண்டாவது விருப்பின் படி பரீட்சை நிலையத்தை தீர்மானிக்கும் அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு உள்ளது. கீழே தரப்பட்ட நகரங்கள் மற்றும் நகர இலக்கங்களை உசாவுதல் செய்து விண்ணப்பத்தின் உரிய பிரிவு நிரப்பப்படல் வேண்டும். குறிப்பிடப்பட்ட நகரம்/நகரங்களை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

| நகரம் | நகர இல. |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |

| நகரம் | நகர இல. |
|---|---|
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அநுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

4.0 (i) இப்பரீட்சையானது, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன், அது தொடர்பில் அவரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர்.

(ii) பரீட்சை விண்ணப்பதாரிகளுக்கான ஒழுங்குவிதிகளானவை வர்த்தமானி அறிவித்தலில் வெவ்வேறாக அச்சிடப்பட்டுள்ளன. இந்த சட்ட திட்டங்களில் எவற்றையாவது மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் உட்படுத்தப்படுவர்.

5.0 **தகைமைகள்** : முகாமைத்துவ சேவை அலுவலர் சேவையில் உள்ள தரம் II இலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவராவர். தரம் II க்கு தரம் உயர்வு பெற்று மூன்று ஆண்டுகளுக்குள் இந்தப் பரீட்யில் சித்தி பெறுதல் வேண்டும்.

**குறிப்பு**.- மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் மற்றும் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஏனைய நிறுவன அலுவலர்களின் விண்ணப்பங்களை இலகுவாக வேறுபடுத்த விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் பொருத்தமான சேவை அல்லது குறித்த நிறுவனத்துக்குரிய குறியீட்டு இலக்கத்தை குறிப்பிட வேண்டும். அந்த வகையில் இணைந்த சேவைக்குரிய உத்தியோகத்தரின் குறியீட்டு இலக்கம் 10 ஆகும். (சரியான இலக்கத்தை குறிப்பிடாதுவிடின் பெறுபேறுகளை வெளியிடுவதில் ஏற்படும் சிக்கல்கள் தொடர்பாக பொறுப்பேற்கப்படமாட்டாது.)

6.0 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும் பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் முகமும் இரண்டு காதுகளும் மூடப்படாத நிலையில் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். அவ்வாறு தங்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கின்ற பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்ததிலிருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு பரீட்சார்த்தியை அடையாளம் காணக்கூடிய வகையில் முகமும் இரண்டு காதுகளும் திறந்திருக்க வேண்டும்.

7.0 (i) விண்ணப்பங்கள்.- இணையவழி மூலமான (Online) பரீட்சை விண்ணப்பங்கள் ஆங்கில மொழிமூலம் மட்டுமே நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் மேற்கொள்ளப்பட்ட மென்பிரதி மற்றும் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்ட அச்சுப் பிரதி ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்துக்குக் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அந்த மென் பிரதியும் அச்சுப் பிரதியும் சரிபார்க்கப்படுவதுடன் (Verify), செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக்களத்தினால், ஏற்றுக்கொள்ளப்பட்டது / ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது முறைமைக்கு பிரவேசிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கைத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தியொன்று (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (ஈ-மெயில்) முகவரிக்கு அறிவிக்கப்படும். இணைய வழி மூலமான விண்ணப்பத்தை நிரப்புவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பொது அறிவுறுத்தல்களை (Common Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள். விண்ணப்பத்தை நிரப்பும் போது இந்த அறிவுறுத்தல்களை கண்டிப்பாக பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாகக் கருதப்பட மாட்டாது. முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

(ii) **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை**.- விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி தகைமையை இரத்துச் செய்ய முடியும்.

(iii) முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியதில்லை. எனினும், அதற்கடுத்த தடவைகளில் அலுவலரினால் ஒரு பாடத்துக்கு ரூபா 250.00 செலுத்த வேண்டும். பரீட்சைக் கட்டணத்தினை செலுத்தும்போது இணையவழி முறைமையில் வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறையின்கீழ் மட்டுமே செலுத்தப்படுதல் வேண்டும்.

(i) எந்தவொரு வங்கிக் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)
(ii) எந்தவொரு வங்கி செலவு அட்டை மூலம் (Any Bank Debit Card)
(iii) இலங்கை வங்கி இணைய வங்கிச் சேவை முறைமை மூலம் (Bank of Ceylon Online Banking Method)
(iv) எந்தவொரு இலங்கை வங்கி கிளையின் மூலம் (Bank of Ceylon Slip Payment)
(v) தபால் திணைக்களத்தின் எந்தவொரு தபால் அலுவலகத்தின் மூலம் (Postal Department Payment at any Post Office)

**குறிப்பு**.- மேற்படி முறைமைகளின் மூலம் கட்டணத்தை செலுத்தும் முறை தொடர்பான அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சையுடன் தொடர்புடைய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன. கட்டணம் கிடைக்கப்பெற்றமை பற்றி குறுஞ்செய்தியொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தியொன்றின் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்துக்கான முழுமையான தொகை செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறப்பட்ட கட்டண முறைமைகளின் ஊடாக பரீட்சைக் கட்டணங்களை செலுத்தும் போது ஏற்படும் தவறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக்கூற மாட்டாது. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட தொகை எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படவோ வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

8.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் அனுமானத்திற்கு ஏற்ப அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்திய விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகம் நேரசூசியின் பிரதிகளையும் அனுமதி அட்டைகளையும் வழங்குவார். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பான அறிவிப்பொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் அல்லது திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 02 நாட்கள் அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் பரீட்சைகள் திணைக்களத்தின் தாபனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளைக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பரீட்சைகள் திணைக்களத்திற்கு கோரிக்கையிடும் வேளையில் பின்வருவனவற்றை அதாவது தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருப்பின் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, உங்களின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், விண்ணப்பப்படிவம் பதிவுத் தபாலில் அனுப்பிய போது பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன் இலங்கைப் பரீட்சை திணைக்களத்திடம் விசாரிக்குமாறு அறியத்தருவதுடன், கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின், மேலே குறிப்பிட்ட விபரங்களுடன் அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கைக் கடிதத்தினை தொலைநகல் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புதல் மிகவும் பயனுடையதாகும். பரீட்சார்த்திகள் தமது கையொப்பங்களை உறுதிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் கையளித்தல் வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையில் தோற்றுவதற்குத் தகுதியினைக் கொண்டுள்ளார் எனக் கருதுதலாகாது.

9.0 பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலேயே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தன்னுடைய கையொப்பத்தினைச் சான்றுப்படுத்திய அனுமதி அட்டையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

10.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ள, அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவான வகையில் கடமை விடுமுறையினை திணைக்களத் தலைவர்கள் அனுமதித்தல் வேண்டும். பிரயாணச் செலவினங்கள் எவையும் செலுத்தப்படமாட்டாது.

11.0 விண்ணப்பத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அதிகாரியால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

12.0 இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் நடாத்தப்படும். உரிய சேவைக்கு நுழைவுப் பரீட்சைக்காக அவர்கள் தோற்றிய மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழி ஒன்றில் பரீட்சார்த்திகள் தோற்ற முடியும். போட்டிப் பரீட்சை இல்லாமல் சேவைக்குள் உள்நுழைந்த பரீட்சார்த்திகள் தொடர்பில் அவர்களின் கல்வி மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழி ஒன்றில் பரீட்சை வினாத்தாள்கள் இரண்டுக்கும் விடையளிக்க முடியும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கப்படும் மொழி மூலத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

13.0 அலுவலர்கள் தமது தற்றுணிபின் பேரில் வேறுபட்ட தடவைகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகத் தோற்றலாம். எனினும், சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் குறைந்தது நாற்பது வீதத்தினை (40%) அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு முகாமைத்துவ சேவை அலுவலர் சேவைப் பிரமாணக் குறிப்பின் இணைப்பு 05 இனைப் பார்க்கவும்.)

14.0 பரீட்சைக்குத் தோற்றிய இணைந்த சேவைகளைச் சேர்ந்த பரீட்சார்த்திகளின் பெறுபேறு அடங்கிய பெயர்ப்பட்டியல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படுவதுடன் விண்ணப்பதாரிகளின் பெறுபேறுகள் அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத் தளத்தில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

15.0 **பரீட்சை நடைமுறை**.- பின்வரும் பாடங்களை உள்ளடக்கும் எழுத்துப் பரீட்சை ஒன்றுக்கு பரீட்சார்த்திகள் தோற்றுதல் வேண்டும் :

| பாடம் | புள்ளிகள் | நேரம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1. அலுவலக முறைமைகளும் பணிச் செயலொழுங்குகளும் | 100 | 02 மணித்தியாலம் | 01 |
| 2. அரசாங்க அலுவலகங்களில் பயன் பாட்டிலுள்ள கணக்கீட்டு முறைகள் | 100 | 02 மணித்தியாலம் | 02 |
| மொத்தம் | 200 | | |

15.1 அலுவலக முறைமைகளும் பணிச்செயலொழுங்குகளும் :- அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள அலுவலக முறைகள் தொடர்பான அறிவு, அவ்வறிவை நடைமுறையில் பிரயோகிக்கும் ஆற்றல் என்பனவற்றை பரீட்சித்தல் இவ்வினாத்தாள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி I - பல்தேர்வு வினாத்தாள். நேரம் 30 நிமிடங்கள். 25 புள்ளிகள்.

பகுதி II - ஒரு பகுதியளவு – கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாத்தாள். நான்கு வினாக்களில் மூன்றிற்கு விடையளிக்க வேண்டும். நேரம் 90 நிமிடங்கள். 75 புள்ளிகள்.

15.2 அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள கணக்கீட்டு முறைமைகள்

அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள கணக்கீட்டு முறைமைகள், கணக்கீட்டு கட்டுப்பாட்டு ஏடுகள், அவை தொடர்பில் திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ள நிதி அறிவுறுத்தல்கள், கட்டளைகள் தொடர்பான அறிவு, அவ்வறிவை நடைமுறையில் பிரயோகிக்கும் ஆற்றல் என்பனவற்றை பரீட்சித்தல் இவ்வினாத்தாள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி I - பல்தேர்வு வினாத்தாள். நேரம் 30 நிமிடங்கள். 25 புள்ளிகள்.

பகுதி II - ஒரு பகுதியளவு - கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாத்தாள். நான்கு வினாக்களில் மூன்றிற்கு விடையளிக்க வேண்டும். நேரம் 90 நிமிடங்கள். 75 புள்ளிகள்.

*16.0 மேலும் இவ் அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினது தீர்மானமே இறுதியானதாகும்.*

*17.0 இப்பரீட்சை அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.*

எஸ். ஆலோக பண்டார,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

*அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,*
*சுதந்திர சதுக்கம்,*
*கொழும்பு 07.*
*2022, பெப்புருவரி மாதம் 09.*

*02-241*

---

**முகாமைத்துவ சேவை அலுவலர் சேவையில் உள்ள தரம் III ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2013 (II) 2022**

*1.0 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் தரம் III ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை, அனுமதிக்கப்பட்ட குறித்த சேவைப் பிரமாணக் குறிப்புக்கமைய பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2022, யூன் மாதம் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது. இதற்கான விண்ணப்பம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின்* www.doenets.lk *இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், இணைய வழி* (online) *முறைமையில் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பங்களை இணைய வழி ஊடாக அனுப்பியதன் பின்னர் அதனை பதிவிறக்கம் செய்து அச்சுப் பிரதியை விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி அவசியமெனில் நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தலுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தாபன பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் முகாமைத்துவ சேவை அலுவலர் சேவையில் உள்ள தரம்* III *ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2013* (II) *2022 என தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2022, மாச்சு மாதம் 28 ஆந் திகதியாகும்.*

*2.0 இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியுடைய பரீட்சார்த்திகள் தொடர்பில் 2013.12.11 ஆந் திகதிய 1840/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பந்தி 8, பந்தி 15 இனது இடைக்கால ஏற்பாடுகள் மற்றும் இணைப்பு 04 இல் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.*

*3.0 இச் சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம்* III *இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையினைப் பூர்த்திசெய்திராத ஆனால் அப்பரீட்சையில் (1) அலுவலக முறைமைகள் (2) கணக்கீட்டு முறைமைகள் (3) கணினிப் பரீட்சை ஆகிய பாடங்களில் ஒன்றிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களிலோ சித்தியெய்தி அல்லது விலக்களிப்புப் பெற்றுள்ள அலுவலர்கள் இச்சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம்* III *இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் உரிய பாடங்களிலிருந்து பாடத்துக்குப் பாட அடிப்படையில் விலக்களிக்கப்படுவர். நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களுக்குள் இப்பரீட்சையினை சித்தியெய்துதல் வேண்டும்.*

*4.0 முகாமைத்துவ சேவை அலுவலர் சேவையில் உள்ள தரம்* III *ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களின் பட்டியல் மற்றும் நகர இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன. குறிப்பிடப்பட்ட நகரம்/நகரங்களை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.*

அனைத்து அல்லது பெரும்பாலான முன்மொழியப்பட்ட நகரங்களிலும் பரீட்சை நிலையங்களை அமைப்பதற்கு போதுமான எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்கவில்லை என்றால், பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏற்பாடு செய்வார்.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அநுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

மேற்படி பரீட்சை நிலையங்களில் போதுமான எண்ணிக்கையில் விண்ணப்பதாரர்கள் இல்லை என்றால், அந்த பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, குறித்த விண்ணப்பதாரர்கள் அருகில் உள்ள பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவார்கள்.

5.0 (i) இப்பரீட்சையானது, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன், அது தொடர்பில் அவரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர்.

(ii) பரீட்சை விண்ணப்பதாரிகளுக்கான ஒழுங்குவிதிகளானவை வர்த்தமானி அறிவித்தலில் வெவ்வேறாக அச்சிடப்பட்டுள்ளன. இந்த சட்ட திட்டங்களில் எவற்றையாவது மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் உட்படுத்தப்படுவர்.

6.0 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது இருந்த விண்ணப்பதாரியின் பதவி மற்றும் சேவை நிலையம், பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்களும் கவனத்தில் எடுக்கப்படுவதுடன் பரீட்சை விண்ணப்பம் அனுப்பியதன் பின்னர் நிகழும் மாற்றங்கள் எவையும் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் மற்றும் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஏனைய நிறுவன அலுவலர்களின் விண்ணப்பங்களை இலகுவாக வேறுபடுத்த விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் பொருத்தமான சேவை அல்லது குறித்த நிறுவனத்துக்குரிய குறியீட்டு இலக்கத்தை குறிப்பிட வேண்டும். அந்த வகையில் இணைந்த சேவைக்குரிய உத்தியோகத்தரின் குறியீட்டு இலக்கம் 10 ஆகும். (சரியான இலக்கத்தை குறிப்பிடாதுவிடின் பெறுபேறுகளை வெளியிடுவதில் ஏற்படும் சிக்கல்கள் தொடர்பாக பொறுப்பேற்கப்படமாட்டாது.)

7.0 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்படி அடையாள அட்டையை சமர்ப்பிக்க முடியாத பரீட்சார்த்திகளின் பரீட்சார்த்தி தகைமையை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் இரத்துச் செய்ய முடியும். மேலும் பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகமும் இரண்டு காதுகளும் மூடப்படாத நிலையில் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். அவ்வாறு தங்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கின்ற பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபடத்திற்கு பிரவேசித்ததிலிருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு பரீட்சார்த்தியை அடையாளம் காணக்கூடிய வகையில் முகமும் இரண்டு காதுகளும் திறந்திருக்க வேண்டும்.

8.0 (i) விண்ணப்பங்கள்.- இணையவழி மூலமான (Online) பரீட்சை விண்ணப்பங்கள் ஆங்கில மொழி மூலம் மட்டுமே நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் மேற்கொள்ளப்பட்ட மென்பிரதி மற்றும் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்ட அச்சுப் பிரதி ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்துக்குக் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அந்த மென் பிரதியும் அச்சுப் பிரதியும் சரிபார்க்கப்படுவதுடன் (Verify), செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக்களத்தினால், ஏற்றுக்கொள்ளப்பட்டது / ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது முறைமைக்கு பிரவேசிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கைத்தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தியொன்று (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (ஈ-மெயில்) முகவரிக்கு அறிவிக்கப்படும். இணைய வழி மூலமான விண்ணப்பத்தை நிரப்புவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பொது அறிவுறுத்தல்களை (Common Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளுங்கள். விண்ணப்பத்தை நிரப்பும் போது இந்த அறிவுறுத்தல்களை கண்டிப்பாக பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாகக் கருதப்பட மாட்டாது. முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

(ii) **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை**.- விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி தகைமையை இரத்துச் செய்ய முடியும்.

(iii) முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியதில்லை. எனினும், அதற்கடுத்த தடவைகளில் ஒரு பாடத்துக்கு ரூபா 200.00 வீதம் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டும். பரீட்சைக் கட்டணத்தினை செலுத்தும்போது இணையவழி முறைமையில் வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைமையின்கீழ் மட்டுமே செலுத்தப்படுதல் வேண்டும்.

(i) எந்தவொரு வங்கிக் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)
(ii) எந்தவொரு வங்கி செலவு அட்டை மூலம் (Any Bank Debit Card)
(iii) இலங்கை வங்கி இணைய வங்கிச் சேவை முறைமை மூலம் (Bank of Ceylon Online Banking Method)
(iv) எந்தவொரு இலங்கை வங்கி கிளையின் மூலம் (Bank of Ceylon Slip Payment)
(v) தபால் திணைக்களத்தின் எந்தவொரு தபால் அலுவலகத்தின் மூலம் (Postal Department Payment at any Post Office)

**குறிப்பு**.- மேற்படி முறைமைகளின் மூலம் கட்டணத்தை செலுத்தும் முறை தொடர்பான அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சையுடன் தொடர்புடைய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன. கட்டணம் கிடைக்கப்பெற்றமை பற்றி குறுஞ்செய்தியொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தியொன்றின் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சை கட்டணத்துக்கான முழுமையான தொகை செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், பரீட்சை கட்டணம் குறைவாக அல்லது கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறப்பட்ட கட்டண முறைமைகளின் ஊடாக பரீட்சை கட்டணங்களை செலுத்தும் போது ஏற்படும் தவறுகள் தொடர்பில் இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக்கூற மாட்டாது. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட தொகை எக்காரணம் கொண்டும் திருப்பியளிக்கப்படவோ வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

9.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் அனுமானத்திற்கு ஏற்ப அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்திய விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பான அறிவிப்பொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் வெளியிடப்படும். அவ் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளதன் படி பரீட்சை நடைபெறும்

திகதிக்கு குறைந்தபட்சம் 02 நாட்கள் அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளதன்படி பரீட்சைகள் திணைக்களத்தின் தாபனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளைக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு விசாரணை செய்யும் போது விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றை சரியாகக் குறிப்பிட வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின் மேற்குறிப்பிட்டுள்ள விபரங்களோடு, அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கைக் கடிதத்தினை தொலைநகல் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புதல் மிகவும் பயனுடையதாகும். அவ்வாறு அனுப்பும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் ஏதாவதொரு தகவலை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருப்பின் அப் பற்றுச்சீட்டின் பிரதி. விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டையும் கைவசம் வைத்திருத்தல் பிரயோசனப்படலாம்.

10.0 விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையில் தோற்றுவதற்குத் தகுதியினைக் கொண்டுள்ளார் எனக் கருதலாகாது. பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தன்னுடைய கையொப்பத்தினைச் சான்றுப்படுத்திய அனுமதி அட்டையினை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவான வகையில் கடமை விடுமுறையினை திணைக்களத் தலைவர்கள் அனுமதித்தல் வேண்டும். பிரயாணச் செலவினங்கள் எவையும் செலுத்தப்படமாட்டாது.

10.1 விண்ணப்பத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அனுமதியளிக்கப்பட்ட அதிகாரியால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

11.0 இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் நடாத்தப்படும். உரிய சேவைக்கு நுழைவுப் பரீட்சைக்காக அவர்கள் தோற்றிய மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழி ஒன்றில் பரீட்சார்த்திகள் தோற்ற முடியும். போட்டிப் பரீட்சை இல்லாமல் சேவைக்குள் உள்நுழைந்த பரீட்சார்த்திகள் தொடர்பில் அவர்களின் கல்வி மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழி ஒன்றில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கப்படும் மொழி மூலத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

12.0 அலுவலர்கள் தமது தற்துணிவின் பேரில் வேறுபட்ட தடவைகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகத் தோற்றலாம். எனினும், சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் குறைந்தது நாற்பது வீதத்தினை (40%) அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

13.0 பரீட்சை பெறுபேறுகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதுடன், பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத் தளத்தில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

14.0 **பரீட்சை நடைமுறை**.- பின்வரும் பாடங்களை உள்ளடக்கும் எழுத்துப் பரீட்சை ஒன்றுக்கு பரீட்சார்த்திகள் தோற்றுதல் வேண்டும் :

| பாடம் | பாட இல. | புள்ளிகள் | நேரம் |
|---|---|---|---|
| 1. அலுவலக முறைமை | 01 | 100 | 02 மணித்தியாலம் |
| 2. கணக்கீட்டு முறை | 02 | 100 | 02 மணித்தியாலம் |
| 3. கணனிப் பரீட்சை | 03 | 100 | 1 1/2 மணித்தியாலம் |

14.1 **அலுவலக முறைமை (பாட இல. 01)** .- அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள அலுவலக முறைமைகள் பற்றிய அடிப்படை அறிவு, அவ் அறிவை நடைமுறையில் பயன்படுத்தும் ஆற்றல், உத்தியோகபூர்வ ஆவணங்களை உரிய முறையில் விளங்கி தெளிவானதும் சுருக்கமானதுமான குறிப்புக்கள் ஊடாக தமது கருத்துக்களை/ அவதானிப்புக்களை உறுதியானமுறையில் சமர்ப்பிக்கும் ஆற்றல், கட்டளைக்கு ஏற்ப கடிதமொன்றினை வரைவு செய்யும் ஆற்றல் என்பன பரீட்சிக்கப்படும். இந்த வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

பகுதி I - குறுகிய பதில்கள் எதிர்பார்க்கப்படும் கேள்விகளைக் கொண்டுள்ளது. வினாத்தாளிலேயே பதில்கள் வழங்கப்பட வேண்டும். அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி II - கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாத்தாள். நான்கு வினாக்களில் மூன்றிற்கு விடையளிக்க வேண்டும். (75 புள்ளிகள்)

*14.2* **கணக்கீட்டு முறைமை (பாட இல. 02)**

அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள அடிப்படை கணக்குகள், கணக்கீட்டு முறைமைகள், கணக்கீட்டு கட்டுப்பாட்டு ஏடுகள் தொடர்பான விளக்கம் மற்றும் அறிவு என்பன பரீட்சித்தல் இவ்வினாத்தாள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

பகுதி I – குறுகிய பதில்கள் எதிர்பார்க்கப்படும் கேள்விகளைக் கொண்டுள்ளது. வினாத்தாளிலேயே பதில்கள் வழங்கப்பட வேண்டும். அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி II – கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாத்தாள். நான்கு வினாக்களில் மூன்றிற்கு விடையளிக்க வேண்டும். (75 புள்ளிகள்)

*14.3* **கணனிப் பரீட்சை (பாட இல. 03)**

விண்ணப்பதாரருக்கு பின்வரும் திறன்கள் உள்ளதா என்பதை பரீட்சிப்பதே இந்த பரீட்சையின் நோக்கமாகும்.

(i) தகவல் தொழில்நுட்பம் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள்

(ii) விண்டோஸ் தொழிற்பாட்டு முறைமை

(iii) கோவை முகாமை

(iv) சொல் உள்ளீடு (Word Processing) அடிப்படைத் தேர்ச்சிகள், திரை பற்றிய பரீட்சயம், வசனங்களில் திருத்தம் செய்தல், வசன அமைவிடம், எழுத்துரு மற்றும் பண்புகள், பந்தியமைப்பு, பந்தி வரிகளுக்கிடையிலான இடைவெளிகளை மாற்றுதல், பாய்புள்ளி அமைப்பு (Tab setting) வசனங்களைத் தேடுதலும் மாற்றீடு செய்தலும், எழுத்துப்பிழை மற்றும் இலக்கணம், ஒத்தக்கருத்துச் சொற்கள், நிரல்களைப் பயன்படுத்தல், பக்க வடிவமைப்பு, ஆவணங்களை அச்சிடல், அட்டவணைகளை உருவாக்குதல், வாசகங்களை வகைப்படுத்தல், கோவை முகாமை, அஞ்சல்களை பல முகவரிக்கு அனுப்புதல் மாக்ரோ (macros) பயன்பாடு.

(v) விரிதாள் (Spreadsheets) அடிப்படைத் திறன்கள், வடிவமைத்தல் (formatting), திருத்துதல், நிரல்கள் மற்றும் வீச்சுக்கள், சொருகுதலும் நீக்குதலும், தரவுகளை வகைபடுத்தல், வரைபுகளை உருவாக்கல், அச்சிடல், @ தொழிற்பாடு (@ function) மக்ரோக்களின் பயன்பாடு, கோவை முகாமை.

(iv) இணையம் மற்றும் மின்னஞ்சல் : இணையம் பற்றிய அறிமுகம், அடிப்படைத் தேர்ச்சிகள், மின்னஞ்சல்களைப் பெற்றுக்கொள்ளுதல், மின்னஞ்சல்களை அனுப்புதல், அவற்றுக்குப் பதிலளித்தல், இணைப்புக்களைப் பயன்படுத்துதல், முகவரிகளை இனங்காண்பதற்கு சுருக்கப்பெயர்களைப் பயன்படுத்தல், தகவல்களைத் தயாரித்தல் இந்த வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

பகுதி I – 40 பல் தேர்வு/குறுகிய பதில் கேள்விகளைக் கொண்டுள்ளது. நேரம் 45 நிமிடங்கள் (40 புள்ளிகள்)

பகுதி II – 05 பகுதியளவு – கட்டமைக்கப்பட்ட கேள்விகள். நேரம் – 45 நிமிடங்கள் (60 புள்ளிகள்).

15.0 பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறுபவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

16.0 மேலும் இவ் அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினது தீர்மானமே இறுதியானதாகும்.

17.0 இப்பரீட்சை அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

எஸ். ஆலோக பண்டார,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2022, பெப்புருவரி 09.

02-242

## மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2022

## First Efficiency Bar Examination for Women Development Officers of State Ministry of Women and Child Development, Pre-School & Primary Education, School Infrastructure & Education Services - 2022

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அலுவலர்களுக்கான முதலாவது வினைதிறன்காண் தடைதாண்டல் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2022, யூன் மாதம் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது. இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2022.03.25 ஆந் திகதியாகும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. **பரீட்சை ஒழுங்குமுறை**.- மேற்படி வினைதிறன்காண் தடை தாண்டல் பரீட்சை பின்வரும் பாடங்களை உள்ளடக்கியதாக இருக்கும். இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழி மூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது.

| | | |
|---|---|---|
| பாட இல. 01 - நிதிப் பிரமாணங்கள்/அலுவலக முறை | - நேரம் 02 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |
| பாட இல. 02 - பால்நிலைசார் மற்றும் பெண்களின் உரிமைகள் | - நேரம் 02 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |
| பாட இல. 03 - சமூகவியல் மற்றும் உளவியல் ஆலோசனை | - நேரம் 02 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |

**குறிப்பு** :-

(அ) சகல பாடங்களுக்கும் ஒரே அமர்வில் அல்லது தனித்தனியாக பல அமர்வுகளில் தோற்றுவதற்கு ஒரு அலுவலருக்கு அனுமதி உண்டு;

(ஆ) சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேல் பெற்றுக்கொள்ளல் வேண்டும்;

(இ) ஒவ்வொரு வினாப்பத்திரமும் கட்டாயமாக பதிலளிக்க வேண்டிய வினாக்களைக் கொண்டுள்ளது.

03. **பாடங்கள்** :- (கட்டமைப்புசார் வினாப்பத்திரங்கள் மூன்றைக் கொண்டுள்ளது.)

03.01 நிதிப்பிரமாணங்கள்/அலுவலக முறைகள்
இலங்கையின் அரசாங்க முகாமைத்துவக் கட்டமைப்பு
தாபனவிதிக்கோவையின் கட்டளைகள் மற்றும் நிதிப்பிரமாணங்கள்
தாபனவிதிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் அத்தியாயங்களை உள்ளடக்கியதாக இருக்கும். I, II, IV, V, VII, IX, XII, XV, XXIII, XXVI, XXVII, XXX, XXXI, XXXII, XXXIII ஆகிய அத்தியாயங்கள், அரசாங்க நிதிப் பிரமாணம் (X ஆம் அத்தியாயத்தை தவிர்த்து) அலுவலக முகாமைத்துவம்.

அலுவலக முகாமைத்துவம்

03.02 பால்நிலைசார் சமூக அந்தஸ்து மற்றும் பெண்களின் உரிமைகள்
பெண்களுக்கு எதிரான பாரபட்சம் காட்டல்
இலங்கை சமூகத்தில் பால்நிலைசார் சமூக அந்தஸ்து
இலங்கை மகளிர் சமவாயம் மற்றும் பெண்களின் உரிமைகள்

03.03 சமூகவியல் மற்றும் உளவியல் ஆலோசனை
கிராமிய சமூகவியல்
இலங்கையின் நகரமயமாக்கல்
கிராம அபிவிருத்தி
உளவியல் ஆலோசனையின் அடிப்படைப் பண்புகள் மற்றும் நன்னெறிகள்
பெண் மற்றும் உளவியல் முறைகேடுகள்
இலங்கையில் ஆலோசனை நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனை வாய்ப்புக்கள்

04. இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை தயார் செய்துகொள்ளல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை தயார் செய்துகொள்ள வேண்டியது A4 அளவான கடதாசியில் இலக்கம் 01 முதல் 07 வரையான தலைப்புக்களை முதலாவது பக்கத்திலும் எஞ்சிய இலக்கங்களை ஏனைய பக்கங்களிலும் உள்ளடக்கும் வகையிலாகும். விண்ணப்பப்படிவத்தை விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் பூர்த்தி செய்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தை தயார் செய்துகொள்ளும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட விண்ணப்பதாரிகளின் பதவி மற்றும் சேவை நிலையம் பரீட்சை தொடர்பிலான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையதாகும் என்பதுடன், விண்ணப்பப்படிவத்தை அனுப்பிய பின்னர் அது தொடர்பில் இடம்பெறுகின்ற எந்தவொரு மாற்றம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக இல்லாத மற்றும் பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைக்க முன்னர், பரீட்சை அறிவித்தலில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக உள்ளதா என்பது பற்றியும், சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பப்படிவம் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றியும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதன் விபரங்களை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டு அதன் பற்றுச்சீட்டு சரியாக ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றியும் கவனம் செலுத்த வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியை உங்கள் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

05. விண்ணப்பப்படிவங்களை தமது திணைக்களத் தலைவர் ஊடாக (பிரதேச செயலகங்களாயின், பிரதேச செயலாளர் ஊடாக) 2022.03.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில், "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் (நிறுவன மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) பிரிவு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கும், கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச கரும மொழிக்கொள்கை பற்றிய பணிக்காக புதிதாக இணைந்துகொண்ட அலுவலர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை அரசகரும மொழி மூலம் அல்லது தம்மை சேவைக்கு இணைத்துக்கொண்ட மொழி மூலத்திற்கு அமைய ஆங்கில மொழியில் தயார் செய்து சமர்ப்பிக்க முடியும்.

06. (i) விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதிச்சீட்டு அனுப்பப்பட்டவுடன் அது பற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கடந்த பின்னரும் தமது அனுமதிச்சீட்டுக்கள் கிடைக்காதிருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்கள் வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்துவது ஏற்புடையதாயின், மேற்படி கட்டணத்தை செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதியுடன் உங்களின் முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட்டு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திடம் வினவுமாறு அறியத்தருவதுடன், கொழும்புக்கு வெளியே உள்ள பிரதேசத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரியாயின், உங்களது மேற்படி விபரங்களுடன், பெக்ஸ் மூலம் அனுமதிச்சீட்டின் பிரதியை துரிதமாக பெற்றுக்கொள்வதற்காக உங்களின் பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களின் கோரிக்கைக் கடிதத்தை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு பெக்ஸ் மூலம் அனுப்பி வினவுவது பயனுள்ளதாக இருக்கும்.

(ii) அபேட்சகர்கள் பரீட்சை அனுமதிச்சீட்டில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளன்று பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொண்ட அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) அபேட்சகருக்கு பரீட்சை அனுமதிச்சீட்டை வழங்குவதானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதற்கான அங்கீகாரமாக கருதப்படக்கூடாது.

07. **ஆளடையாளம்** .- பரீட்சை அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடைக்கூடிய வகையில் தமது ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். இதற்குப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும்:-

(i) தேசிய ஆள் அடையாள அட்டை;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும் பரீட்சை அபேட்சகர்கள் தமது ஆளடையாளத்தை உறுதி செய்துகொள்ளக்கூடியவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காதவாறு பரீட்சை மண்டபத்துக்குள் நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சைகள் மண்டபத்திற்குள் பிரவேசித்த சந்தர்ப்பம் முதல் பரீட்சை நிறைவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை மண்டப அலுவலர்களுக்கு அபேட்சகரை இனங்காணக்கூடியவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

08. **பரீட்சைக் கட்டணம்**:- இப்பரீட்சைக்குத் தோற்றும் அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும்.

**பரீட்சைக் கட்டணம்**

| | | ரூ. ச. |
|---|---|---|
| (அ) | முதல் தடவை கட்டணம் அறவிடப்படமாட்டது | - |
| (ஆ) | முதலாவது தடவையின் பின்னர் முழுப் பரீட்சைக்கும் | 500.00 |
| (இ) | ஒரு பாடத்திற்கு | 250.00 |

பரீட்சைக் கட்டணத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் அரசாங்க வருமானத்துக்கு செலவு வைக்கப்படும் வகையில் நாடு முழுவதிலும் அமைந்துள்ள தபால்/ உப தபால் அலுவலகமொன்றில் பணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் அகன்றுவிடாதவாறு ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்துக்கு காசுக் கட்டளை அல்லது பணம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சையொன்று மாற்றம் செய்யப்படவோ மாட்டாது. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

09. (i) இப்பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன், அவர் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் விதித்துள்ள சட்டங்கள், விதிகளுக்கு பரீட்சை அபேட்சகர்கள் கட்டுப்படுவார்கள். மேற்படி சட்டங்கள், விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அபேட்சகர்கள் உட்பட வேண்டி ஏற்படும்.

(ii) பரீட்சைக்குத் தோற்றும் சகல அபேட்சகர்களினதும் பெறுபேறுகளை உள்ளடக்கிய பெறுபேறு ஆவணம், மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும்.

10. இப் பரீட்சைக்குத் தோற்ற தகைமைபெற்றுள்ள மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள அனுமதிச்சீட்டைப் பெற்றுள்ள தமது திணைக்கள/ அலுவலக அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றக்கூடிய வகையில் திணைக்கள/அலுவலகத் தலைவரினால் கடமை விடுப்பு வழங்கப்படுதல் வேண்டும்.

11. இந்த ஒழுங்குவிதிகளில் உள்ளடங்கலாக யாதாயினுமொரு விடயம் இருப்பின் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் தற்றுணிபின் பேரில் அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழிகளுக்கு இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கே. எம். எஸ். டீ. ஜயசேகர,
செயலாளர்,
மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி,
முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி,
பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள்
இராஜாங்க அமைச்சு.

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி,
முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி,
பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள்
இராஜாங்க அமைச்சு.
5 ஆம் மாடி,
செத்சிறிபாய 2 ஆம் கட்டம்,
பத்தரமுல்லை,
2022.02.10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2022**

01. நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் 2
தமிழ் 3
(உரிய இலக்கத்தைக் கூண்டில் குறிப்பிடுக.)

02. 2.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :-
..............................................................................
..............................................................................
(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

2.2 இறுதிப் பெயரை முதலிலும், ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இறுதியாகவும் குறிப்பிட்டு பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :
..............................................................................
(உ-ம் : GUNAWARDHANA, H.M.S.K.)

2.3 முழுப் பெயர் (சிங்களம் /தமிழில்) :
..............................................................................
..............................................................................

03. 3.1 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
..............................................................................
..............................................................................

3.2 அலுவலக முகவரி (சிங்களம்/தமிழில்) :
..............................................................................
..............................................................................

3.3 பரீட்சை அனுமதிச்சீட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கிலக் கெப்பிடல் எழுத்தில்) :
..............................................................................
..............................................................................

3.4 தொலைபேசி இலக்கம் :..............................................................

04. 4.1 பால்நிலை :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

4.2 பிறந்த திகதி :
ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

4.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு (2022.03.25) வயது :

வருடங்கள்: | | | மாதங்கள்: | | | நாட்கள் : | | |

05. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

06. கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

07. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியின் கீழ் தோற்றும் பாடங்கள் மற்றும் பாட இலக்கம் :

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| 1. ......................... | |
| 2. ......................... | |
| 3. ......................... | |

08. மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அலுவலர் பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
(நிரந்தரமாகப் பதவியை பொறுப்பேற்றுக் கொண்ட திகதி)

09. அரச கரும மொழிக்கொள்கையின் குறிக்கோள்கள் தொடர்பில் முன்னர் பிரவேசித்தவரா? :----.
அல்லது புதிதாக பிரவேசித்தவரா? :----.

10. திணைக்களத்தின் பெயர் (பிரதேச செயலகம் எனின் அதன் பெயர்) :----.

11. பரீட்சைக்குத் தோற்றுவது முதற் தடவையாகவா? :----.

12. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரம் :-

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :----.
(iii) செலுத்தப்பட்ட திகதி :----.

பற்றுச்சீட்டினை அகன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும்.

(பற்றுசீட்டின் பிரதியை உங்கள் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.)

13. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரிமையுள்ளது என்றும் தெரிவிக்கின்றேன். மேலும், பரீட்சையை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதித்துரைக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகளுக்கும் நான் கட்டுப்படுகின்றேன் என்றும் தெரிவிக்கின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது குறித்த திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு தத்துவமளிக்கப்பட்டுள்ள அதிகாரியொருவரின் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிடுதல் வேண்டும்.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் அலுவலரும், நான் தனிப்பட்ட வகையில் அறிமுகமானவருமான திரு./திருமதி/செல்வி ........... ......................................................................................... என்பவர் ................................................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று நான் சான்றுப்படுத்துகின்றேன்.

-----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்

பெயர் :-----.

பதவி :-----.

முகவரி :-----.

**திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல்**

மேலே வழங்கப்பட்டுள்ள விபரங்களை பரிசோதித்துப் பார்த்தேன் என்றும், அவை சரியானவை என்றும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு குறித்த பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் விண்ணப்பதாரி முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றார் என்றும், அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதிபெற்றுள்ளார் என்றும் நான் சான்றுப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரையை பதிவு செய்தல் வேண்டும்).

பெயர் :-----.

பதவி :-----.

முகவரி :-----.

திகதி : -----.

(பொருத்தமற்ற சொற்களை கீறிவிடுக.)

*02-244*

---

**நீதிச்சேவைகள் ஆணைக்குழு**

அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2022

1. 2088/26 ஆம் இலக்கமுடைய 2018.09.11 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2022 ஆம் ஆண்டிற்கு தோற்றுவதற்கு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பரீட்சையானது நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் கொழும்பில் நடாத்தப்படும். நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இப்பரீட்சையினை ஒத்திவைப்பதற்கான அல்லது செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

**2. சேவை நிபந்தனைகள்.-**

2.1 அரச சேவையின் நியமனத்தை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2088/26 ஆம் இலக்க மற்றும் 2018.09.11 ஆந் திகதி அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரமாணக் குறிப்பில்

விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பிற்கு செய்யப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்கு நியமிக்கப்படுவார்.

2.2 இந்நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும். அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டு 05 வருடங்களுக்குள் வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்.

2.3 தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் மற்றும் /அல்லது நியமனம் பெற்ற பதவியில் அல்லது நியமனம் வழங்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளை பொறுப்பேற்பதனை மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

2.4 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2088/26 மற்றும் 2018.09.11 ஆந் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் தொடர்பான பிரமாணக் குறிப்பில் அரச மொழிக் கொள்கை நடைமுறைபடுத்தலுக்கு அமைவாக பிரிவு 12.18 பிரகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள மற்றும் / அல்லது எதிர்காலத்தில் வெளியிடப்படவுள்ள சுற்று நிருபங்களுக்கு அமைவாக அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III பதவிக்குரிய மற்றைய அரச மொழி தொடர்பிலான தேர்ச்சியினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

3. சம்பளம் : பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 மற்றும் அதற்கு அமைவாக நீதிச் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2016.06.24 ஆந் திகதிய நீதிச்சேவை ஆணைக்குழுவின் 386ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக, அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்குரிய (MN 2 -2016 ) ரூ. 28,940 – 10 x 300 – 11 x 350 – 10 x 560 – 10 x 660 - ரூ. 47,990 (ஆரம்ப சம்பளம் ரூ. 28,940) ஆகும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

4. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது. அட்டவணைப்படுத்தப்பட்ட அரச சேவையில் உள்ள பதவிகள் ஓய்வூதியம் பெறக்கூடியவை என மேலே குறிப்பிடப்பட்டு இருப்பினும் எதிர்காலத்தில் இணைத்துக்கொள்ளப்படும் நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் சேவையின் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர் தொடர்பில் அவர்களுக்கு ஏற்புடைய ஓய்வூதிய முறைமை தொடர்பாக அரசாங்கம் மற்றும் / அல்லது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படவுள்ள கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்கு ஏற்ப தீர்மானிக்கப்படும்.

5. **தகைமைகள்**.- அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவைக்குரிய நீதிமன்ற முகாமைத்துவ உதவிச்சேவையின் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்குரிய பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு கீழ்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ஆ) வயதெல்லை – 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(இ) நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
(ஈ) அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் சகல அபேட்சகர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் சிறந்த உடல், உள ஆரோக்கியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
(உ) கீழ்வரும் கல்வித்தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. ஆங்கில மொழி உட்பட நான்கு (04) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

II. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, தொழில்நுட்ப கல்லூரி அல்லது அரச பதிவுடைய பயிற்சியளிக்கும் நிறுவனமொன்றில் சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து பாடநெறியினை சிறந்த முறையில் பயின்று அதில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி 25 ஆந் திகதி அல்லது அதற்கு முதல் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. **பரீட்சை நடபடிமுறைகள்**.- இப்பரீட்சையானது மூன்று (03) வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும்.

| | வினாப்பத்திரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைய பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | மொழித்திறன் | 100 | 40 |
| 02. | உளச்சார்பு | 100 | 40 |
| 03. | சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து(ஆங்கிலம்) | 100 | * |

(* வெற்றிடங்களின் எண்ணிக்கையினை கருத்திற் கொண்டு சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து பரீட்சையில் சித்தி பெற வேண்டிய புள்ளி மட்டமானது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.)

இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் தாம் விரும்பிய ஒரு மொழியை மாத்திரம் தெரிவு செய்ய முடியும்.

விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழி மூலம் மாத்திரமே "மொழித்திறன்" மற்றும் "உளச்சார்பு" வினாப்பத்திரங்களுக்கு விடையளிக்க வேண்டும்.

இவ்வினாப்பத்திரங்கள் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள், கட்டமைப்பு ரீதியான கட்டுரை வினாக்கள் மற்றும் / அல்லது பிரயோக ரீதியிலான வினாக்களைக் கொண்டவையாகும்.

சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து வினாப்பத்திரங்களுக்கு ஆங்கில மொழி மூலம் மாத்திரமே விடையளிக்க வேண்டும். கடமை நிமித்தம் அபேட்சகருக்குள்ள தகைமைகள் மற்றும் திறன்களை பரீட்சிக்கும் நோக்கில் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.

**பரீட்சைக்கான பாடத்திட்டம்**.-

| | வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|---|
| 01 | மொழித் திறன் | இவ்வினாப்பத்திரம் பரீட்சார்த்தியின் கருத்து தெரிவித்தல், கிரகித்தல், எழுத்தறிவு, மொழி மற்றும் கட்டுரை, கடிதம் ஒன்றுக்கான பரும்படியைத் தயாரித்தல், வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாக வரைபுகள் மற்றும் அட்டவணைகள் தயாரித்தல், சுருக்கம் எழுதுதல், தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சிலவற்றின் கருத்தை தனி வாக்கியத்தில் எழுதுதல் மற்றும் எளிய இலக்கண பயன்பாடு தொடர்பிலான அறிவை பரீட்சிக்கும் விடயரீதியான வினாக்களைக் கொண்டதாகும். |
| 02 | உளச்சார்பு | இவ்வினாப்பத்திரமானது பரீட்சாத்தியின் எண் சார்ந்த திறன், தர்க்கிக்கும் ஆற்றல், பொது அறிவு என்பவற்றை அளவிடும் வகையிலான விடயப்பரப்பிற்குரிய வினாக்களைக் கொண்டதாக அமையும். |
| 03 | சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து (ஆங்கிலம்) | சுருக்கெழுத்து (ஆங்கிலம்)<br>நிமிடத்திற்கு 80 சொற்கள் என்ற ஆகக்குறைந்த வேகத்தில் 05 நிமிடங்களுக்குள் வாசிக்கப்படும் பந்தியொன்றை சுருக்கெழுத்து செய்து அதனை நிமிடத்திற்கு 08 சொற்கள் என்ற வேகத்தில் பிரதியாக்கல் வேண்டும்.<br>தட்டச்சு (ஆங்கிலம்)<br>தரப்படும் 600 சொற்கள் கொண்ட பந்தியொன்றை நிமிடத்திற்கு 30 சொற்கள் என்ற வேகத்தில் தட்டச்சு செய்தல். |

**குறிப்பு** : அனைத்து எழுத்து மூல விடைப்பத்திரங்கள் தொடர்பிலும் தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

7. பரீட்சையின் சகல பாடங்களிலும் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகளில், உயர் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளிலிருந்து கீழ்நோக்கிய புள்ளி ஒழுங்கினை பின்பற்றி, தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப்பரீட்சையின் பின்னர் அப்பரீட்சைக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான விண்ணப்பதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படலாம். எவ்வாறெனினும் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் குறித்த வெற்றிடங்களின் எண்ணிக்கையினை நிரப்பாமல் இருப்பதற்கான தீர்மானமும் எடுக்கப்படலாம்.

பரீட்சை பெறுபேறுகள் - நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விண்ணப்பதாரிகளுக்கு தபால் மூலம் பரீட்சை பெறுபேறுகள் அனுப்பப்படும்.

8. **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை**.- விண்ணப்பதாரி ஒருவர் முக்கியத்துவம் வாய்ந்தது என கருதப்படும் யாதேனுமொரு விடயம் தொடர்பான பிழையான கூற்றினை தெரிவித்துள்ளமை அல்லது உண்மையை மறைத்துள்ளமை தெரிவு செய்யப்பட முன்னர் தெரிய வருமாயின் தகைமையற்றவராக ஆக்கப்படலாம். தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமாயின் சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது அவரது சேவை முடிவுறுத்தப்படலாம்.

9. பரீட்சைக் கட்டணம் - பரீட்சைக் கட்டணம் ரூபா 400 ஆகும். இக்கட்டணத்தை “நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்” பெயரில் மக்கள் வங்கி, டாம் வீதிக் கிளையில் பேணிச் செல்லப்படும் 297 100 199 025 039 கணக்கிற்கு வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் அகற்ற முடியாத வகையில் ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) எக்காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படாததுடன் காசுக்கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

10. **விண்ணப்பிக்கும் முறை** .-

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட வேண்டியதுடன், 8 ½" x 12" (A4) அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். இதற்காக கணினியினால் தயாரிக்கப்பட்ட அல்லது தட்டெழுத்து செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பயன்படுத்தலாம்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையான தகவல்களைக் கொண்டிராத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் உள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என விண்ணப்பதாரி தேடிப்பார்த்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழி மூலமே தயாரிக்கப்படல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத்தபாலில் 2022, மாச்சு மாதம் 25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம், கொழும்பு 12 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் “அட்டவணைப்படுத்தப் பட்ட அரசாங்க உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2022” என்பதனை தெளிவாக எழுத வேண்டும். 2022, மாச்சு மாதம் 25 ஆந் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையின் அதிபர் ஒருவரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்திய ஆணையாளரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படையின் அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவரினால், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொலிஸ் சேவையில் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது பகிரங்க சேவைக்குரிய நிரந்தர பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை தரத்திற்குரிய உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(உ) தற்போது பகிரங்க சேவையில் ஈடுபட்டுள்ள மேற்குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தங்களது திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) எல்லா விதங்களிலும் முழுமையற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தொலைந்து போதல் மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறல் என்பது தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

11. **பரீட்சைக்கு தோற்றல்**.- விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்படமாட்டாது. அனுமதி அட்டை தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிட்டால் நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன் போது விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைக் குறிப்பிடவேண்டும். கொழும்பிற்கு வெளியே வதியும் விண்ணப்பதாரிகள் எனின் தொலைநகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியினை பெற்றுக்கொள்வதற்காக உங்களது தொலைநகல் இலக்கத்தையும் மற்றும் மேற்குறிப்பிட்ட விபரங்களையும் உள்ளடக்கிய கோரிக்கை கடிதமொன்றையும் நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தின் தொலைநகல் இலக்கங்களுக்கு 0112 421 206 அல்லது 0112 446 111 அனுப்புவதுடன் அது தொடர்பில் விசாரித்தல் பயன்மிக்கதாக இருக்கும். மேலும் நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு விண்ணப்பதாரியிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டதனை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்திருப்பது பயன்மிக்கதாய் அமையும்.

12. **பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளம்**.- பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோன்றும் எல்லா விடயதானங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு
(இ) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

13. **பரீட்சைக்கு தோற்றுதல்**.-

(அ) எல்லா விதத்திலும் முழுமையான விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அனுமதி அட்டை வழங்கப்படும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சாத்திகள் தங்களுக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். அனைத்து பரீட்சாத்திகளும் உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையை, கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு பரீட்சைக்கு தோற்றும் முதலாம் நாள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச் சட்டவிதிகளை மீறினால் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுதலானது அவ் விண்ணப்பதாரர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

14. இவ் ஒழுங்குவிதிகளில் கவனத்திற் கொள்ளப்படாத விடயங்கள் இருப்பின் அவ்விடயங்கள் தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

15. இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வடிவங்களுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலிற்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச். எஸ். சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
2022, பெப்புருவரி 18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2022**

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

01. மொழி
பரீட்சைக்கு தோற்றும் மொழி
சிங்களம் -1
தமிழ் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

02. பிரத்தியேக தகவல்கள் :
2.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி ............................................................
............................................................
(ஆங்கில கெபிடல் எழுத்தில்) உதாரணம் : SRIWARDANA, A.P.K.
2.2 முழுப்பெயர் : ............................................................
(ஆங்கில கெபிடல் எழுத்தில்)
2.3 முழுப்பெயர் : ............................................................
(சிங்களத்தில் / தமிழில்)
2.4 பிரத்தியேக முகவரி : ............................................................
(சிங்களத்தில் / தமிழில்)
2.5 வசிக்கும் மாவட்டம் : ............................................................
2.6 அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெபிடல் எழுத்தில்) :
............................................................
2.7 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :
2.8 பிறந்த திகதி :
வருடம் : மாதம் : திகதி :
2.9 2022.02.25 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :
2.10 பால் நிலை: ஆண் - 1 பெண் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.) :
2.11 சமூக அந்தஸ்து : திருமணமானவர் - 1 திருமணமாகாதவர் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.) :
2.12 தொலைபேசி இலக்கம் :
நிலையானது : ......................... கையடக்க தொலைபேசி : ...............
தொலைநகல் : .....................

03. கல்வித் தகைமைகள் :
3.1 க.பொ.த. (சா./த.) பரீட்சை தொடர்பான விபரங்கள்:
(1) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ............................
(2) பரீட்சை சுட்டெண் : ............................
(3) பெறுபேறுகள் :

| விடயம் | தரம் | விடயம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

3.2 க.பொ.த.(உ/த) பரீட்சை தொடர்பான பெறுபேறுகள் :

(1) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ............................

(2) பரீட்சை சுட்டெண் : ............................

(3) பெறுபேறுகள் :

| *விடயம்* | *தரம்* |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

04. சுருக்கெழுத்து தொடர்பாக பயின்றுள்ள பாடநெறிகள் : ....................................................
(பூர்த்தி செய்துள்ள பாடநெறிகளின் சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்குக.)

05. வேறு தகைமைகள் : ..............................................................................................................
..............................................................................................................................................

06. நீங்கள் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ?
(உரிய கூட்டினுள் ( √ ) அடையாளமிடுங்கள்), (ஆம் எனின் விபரங்களை குறிப்பிடுக.)
ஆம் : ☐ இல்லை : ☐ ......................................................................................

..............................................................................................................................................

07. பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

பரீட்சைக்கட்டணம் செலுத்திய கிளை : ...................................
பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி : .....................................
செலுத்திய பணம் : ...................................

பற்றுச்சீட்டினை அகற்ற முடியாதவாறு ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாய் இருக்கும்.)

08. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நான் அறிந்த வகையில் சரியானவையும் உண்மையானவையும் என தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் யாதேனும் பகுதிகள் நிரப்பப்படாமல் மற்றும் / அல்லது பிழையாக நிரப்பப்படுவதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை தாங்கிக் கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும் இதில் அனைத்து பகுதிகளும் சரியான முறையில் நிரப்பப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்ட கூற்று பிழையானது என நிரூபிக்கப்பட்டால், நியமனம் பெறுவதற்கு முன்னர் தகைமையற்றவர் ஆவதற்கும் நியமனம் பெற்ற பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் முடியும் என்பதனை நன்கறிவேன்.

(இ) மேலும், பரீட்சையை நடாத்துவதுடன் தொடர்புடையதாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் விதிகளுக்கு நான் கீழ்படிகின்றேன் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

.......................................
திகதி :.......................... விண்ணப்பதாரியின் கையொப்பம்.

09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .............................. என்பவரை நான் பிரத்தியேகமான முறையில் நன்கறிவேன் என்பதனையும், எனது முன்னிலையில் ......................... ஆந் திகதி அவரது

கையொப்பத்தை இட்டார் என்பதனையும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதனையும் அப்பற்றுச்சீட்டினை இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :-------------.

..............................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ...........................
பதவி : ....................................................
முகவரி : ................................................
(உத்தியோகப்பூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்துக.)

**திணைக்களத் தலைவரின் விதந்துரை (தற்போது பகிரங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)**

இந்த ........................................... சேவையாற்றும் திரு./திருமதி/செல்வி ..........................என்பவருக்கு அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் III இற்குரிய பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான கல்வித் தகைமைகளை கொண்டுள்ளார் என்பதனையும், விண்ணப்பதாரி இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதனையும் 25.02.2022 ஆந் திகதிக்கு 35 வயதிற்கு மேற்படாதவர் என்பதனையும், எனது முன்னிலையில் ........................ ஆந் திகதி கையொப்பமிட்டார் என்பதனையும், உரிய பரீட்சை கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதனையும், அப்பற்றுச்சீட்டினை இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டியுள்ளார் என்பதனையும் தெரிவித்து, விண்ணப்பதாரியின் விண்ணப்பத்தை விதந்துரை செய்து இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

திகதி :---------

---------------
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
உத்தியோகப்பூர்வ முத்திரை

02-285

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.